1979 பிப்ரவரி 20]

தொழிற்சாலையும் பிற்பட்ட பகுதியை சார்ந்துள்ள நிலைமையைக் கருத்தில் எடுத்துக்கொண்டு—நிவாரணமாகக் கொடுத்து அந்தத் தொகையை ஈடுகட்ட அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒரு நிறுவனத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்—அந்த நிறுவனம் சரியாக இயங்குகிற சூழ்நிலை வருகிறபோது அதனால் ஏற்படுகிற லாபத்தைப் பெறுவதற்குத் தகுதியுடைவர்கள்-அதைப் போலவே ஒரு நிறுவனத்திலே நஷ்டம் ஏற்படுகிறபோது அந்த நஷ்டத்தையும் அவர்கள் பகிர்ந்து கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது.

கட்டிடக் கழகம்

* வினா எண். 101—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகுநிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் கட்டிட கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன், விவரம் என்ன?

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) இவ்விஷயம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இதைப்பற்றி நிர்வாக சீர்திருத்தக் குழு எதுவும் பரிந்துரைகள் செய்துள்ளதா? அதைப் போலவே இதற்கு முன்னாலே இருந்த தி. மு, க. அரசு இதைப் பற்றி ஏதேனும் முடிவு எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்: தலைவர் அவர்களே, தனக்கென தனியாக (பொதுப்பணித் துறையிலிருந்து வேறுபட்ட) கட்டுமான பிரிவுகளை கொண்ட அரசுத் துறைகள்/நிறுவனங்கள் ஆகியவைகள் தாங்களே அவைகளுக்குரிய கட்டுமானப் பிரிவுகளை வைத்துக்கொள்ளலாம். எனினும் அவைகள் பரவலாகப் பெருகாமல் தடுக்கவேண்டும் என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரை செய்துள்ளது. எல்லா அரசுத்துறை/நிறுவனங்கள் ஆகியவைகளின் கட்டுமானப் பணிகளை பொதுப்பணித் துறையே மேற்கொள்ள வேண்டும் என்று 1975 இல் முன்னால் இருந்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே உள்ள மருத்துவ மனைக் கட்டடங்களைக் மருத்துவத் துறையே மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

[1979 பிப்ரவரி 20

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவைகளைக் கட்டும் பணி தற்போது பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ளது. அந்தப் பொறுப்பு அத்துறையிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டு அக்கட்டடப் பணிகளை மருத்துவம் மற்றும் கல்வித் துறைகளே மேற்கொள்ள கட்டுமானப் பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுபணித் துறையில் உள்ள கட்டடப் பிரிவில் வருங்கால அமைப்பு குறித்து முடிவெடுப்பதற்காக அமைச்சரவையின் பரிசீலனைக்கு வைக்கலாம் என்று முதல்வர் ஆணை பிறப்பித்து இருக்கிறார். அமைச்சரவையின் முடிவு தெரிந்து பின்புதான் கட்டட கட்டுமான நிறுவனம் அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 9-10]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இந்தக் கட்டிட கார்ப்பரேஷன் ஒன்றைத் தனியாக அமைக்க உத்தேசம் இருப்பதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் கூறினார்கள். இப்பொழுது இருக்கின்ற பொதுப்பணித்துறை கட்டி வரும் அந்த நிலைக்கும், தனியாகக் கட்டிட கார்ப்பரேஷன் அமைக்க உத்தேசித்திருப்பதற்கும் என்ன சிலாக்கியம் இருக்கிறது அல்லது அதைவிட இது எப்படி மேம்பட்டதாக இருக்கும் என்று விளக்கினால் நலமாக இருக்கும்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அரசுத்துறைகள், அரசு நிறுவனங்கள் ஆகியவைகளின் கட்டிடப்பணிகளை யார் எடுத்துச் செய்வது என்னும் கேள்வி கடந்த சில ஆண்டுகளாகவே ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுகளுக்குப் பிறகுதான் அதன் முழுமையான விவரங்கள் தெரிவிக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, சாலைகள் வரையிலான கட்டுமான நிறுவனம் அமைப்பது ஆய்வில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவரவர்களே, சாலைகள் வரையிலான கட்டுமான நிறுவனம் ஒன்று அமைப்பதுபற்றி இத்துறை முன்பு ஆராய்ந்தது. ஆனால் இப்போது அது போக்குவரத்துத் துறையில் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, கட்டிட கார்ப்பரேஷன் தனியார்களுக்கு டெண்டர் மூலம் காண்ட்ராக்ட் விடுவதைத் தவிர்த்து கார்ப்பரேஷனே நேரடியாக அந்தக் கட்டிடத்தைக் கட்டி, தனியார் பெறும் இலாபம் அரசுக்குக் கிடைக்க வழிவகை செய்யுமா? வேலையில்லாதவர்களுக்கு நிரந்தர வேலை கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

1979 பிப்ரவரி 20]

திரு. எம், வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர் பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் தனியாகக் கேள்வி போடவும்.

பம்பு செட்டுகளுக்கு மின்விசை வழங்கல்

வினா எண். 102—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின்விசை வழங்குவதில் புதிய நடைமுறை ஏதேனும் மேற்கொள்ளப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) புதிய நடைமுறைகளின்படி, 1–7–78 முதல் மனுச் செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு மின்வழங்கும் திட்டத்தின்மீதான 10 சதவிகித அளவு வருவாய் அளவை கருத்தில் கொள்ளாமல் மின் இணைப்பு வழங்கப்படும். தன்னிச்சையாக மின்வாரியம் நிலத்தடிநீர் சான்றிதழ் கேட்காது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்விசை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கும் அடிப்படையில் அவர்கள் கோரிக்கை விடுத்த 9 மாத காலத்திற்குள்ளாகவே கொடுக்கப்பட வேண்டுமென்ற நியதி இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள் பம்பு செட்டுகள் வாங்கியதற்குப் பின்னாலும்கூட மின்விசை வழங்குவதில் 9 மாத காலத்திற்குள்ளாக வழங்கப்படுவதில்லை என்று சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா ? அப்படியிருப்பின் அதை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 9 மாதம் என்ற காலவரையறை இல்லை. ஆனால் சேங்ஷன் ஆனவுடன் அந்த விவசாய பம்பு....

திரு. என். கிட்டப்பா : மன்னிக்கவும் 9 மாதம் அல்ல, 90 நாட்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதாவது சேங்ஷன் ஆன 3 மாதங்களுக்குள் அவர்கள் மோட்டாரை வாங்கி வைக்க வேண்டும். அவர்கள் மின்சாரத்தை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் அது அமைகிறது. அப்படி 3 மாதங்களுக்குள் மின்சார மோட்டாரை வாங்கி வைக்காவிட்டால் அவர்களுக்கு அனுமதி ரத்து செய்யப்படுகிறது.